கனம் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்.
முன்னிலை : திரு. E.மணிகண்டன், B.A., B.L.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி(FAC),
திருமங்கலம்.
2026ம் வருடம் மார்ச் மாதம் 17ம் தேதி செவ்வாய்க்கிழமை
இடைநிலை மனு எண்.2/2023
இன்
அசல் வழக்கு எண்.271/2023
-----

கணேஷ் குமார் ... மனுதாரர்/வாதி

/ எதிர்/

1) செயலாளர், மதுரை ஆட்டோமொபைல்
கூட்டுறவு தொழிற்பேட்டை லிமிடெட், கப்பலூர்
2) பொதுச் செயலாளர்/மாவட்ட பதிவாளர்,
மாவட்ட தொழில் மையம், மதுரை

... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது 12.03.2026ல் இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.D.ராஜாமோகன் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.தனபாண்டியன் அவர்கள் ஆஜராகியும், 2ம் எதிர்மனுதாரர் ஒருதலைபட்சமாக்கப்பட்டும், இருதரப்பு வாதுரைகளுக்கு போதிய வாய்ப்பளித்தும், மனு மற்றும் வழக்கு ஆவணங்களை பரிசீலனை

செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் முன் பரிசீலனையின் கீழ் இருந்து வந்த மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## உத்தரவு

இவ்வழக்கு எதிர்மனுதாரர்களோ, அவர்களது வகையாட்களோ இவ்வழக்கு நிலுவையில் உள்ள காலத்தில் தாவா சொத்தில் வாதியின் அமைதியான அனுபவத்திற்கு எவ்வித இடைஞ்சல் செய்யக்வடாது என்று இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க கோரி உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 39 விதி 1, 2 மற்றும் பிரிவு 151ன் கீழ் மனுதாரர்/வாதியால் இந்த மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை** :–

இந்த மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவானது சட்டப்படி நிலைக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

1.1) அசல் வழக்கானது, தாவா சொத்தில் வாதியின் அமைதியான அனுபவத்திற்கு பிரதிவாதிகளோ, அவரது வகையாட்களோ எவ்வித இடைஞ்சலும் செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதே, காரணத்திற்காக ஒரு

இடைக்கால தடை உத்தரவு பரிகாரம் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) 1ம் எதிர்மனுதாரர்/ 1ம் பிரதிவாதி தரப்பில் அவர் அசல் வழக்கில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை இம்மனுவின் எதிருரையாக பாவித்துக் கொள்ள வேண்டுமென குறிப்பாணை தாக்கல் செய்து இம்மனுவினை அனுமதிக்கக்கூடாது என ஆட்சேபனை தெரிவித்துள்ளார்.

**3. தீர்வு:–**

ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இருதரப்பு வாதுரைக்கும் போதிய வாய்ப்பளிக்கப்பட்டது.

3.1) மேலும், கட்டளை 39 விதி 1, 2 CPC கீழ் மனுதாரர் நிவாரணம் பெற வேண்டும் என்றால்,

(i) மனுதாரர் வழக்கிற்கு முதற்தோற்ற வழக்கு இருக்கவேண்டும்.

(ii) மேற்படி நிரந்தர தடையுறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்காவிட்டால் மனுதாரருக்கு பணத்தால் ஈடு செய்ய முடியாத இழப்பும் துன்பமும் ஏற்படும் என்றும், Balance of convenience மனுதாரருக்கு

ஆதரவாக உள்ளது என்று நிருபணம் செய்யவேண்டியது அவசியமானதாகும். ஆனால், இம்மனுவில் மேற்படியான நிபந்தனைகளை நிரூபணம் செய்யும் விதமாக மனுதாரர்/வாதி தரப்பில் வாய்மொழி சாட்சியங்களோ, ஆவண சாட்சியமோ முன்னிலைப்படுத்தவில்லை.

3.2) மேலும், மேற்படி அசல் வழக்கின் பரிகாரமானது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமாக உள்ள நிலையில், மேற்படி மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த இடைக்கால மனுவினை அனுமதிக்காததால் மனுதாரர்/வாதிக்கு பணத்தால் ஈடுசெய்ய முடியாத இழப்பு ஏற்படும் என்று மனுதாரர்/வாதி தரப்பால் நிரூபணம் செய்யாததாலும், அசல் வழக்கில் தீர்வு காணவேண்டிய பிரச்சனையும், இம்மனுவில் தீர்வு காணவேண்டிய பிரச்சனையும் ஒன்றாக இருப்பதாலும், வழக்குச்சொத்தை பொறுத்து மனுதாரர்/வாதிக்கு தடையுறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதா? என்பதை முழு விசாரணைக்கு பின்பு தான் தீர்வு காண இயலும் என்பதால், மேற்படி காரணங்களை கருத்தில் கொண்டு இம்மனுவானது இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

**முடிவாக,** மனுதாரர்/வாதி கோரியுள்ள இடைக்கால தடை உத்தரவு கட்டளை பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று இம்மனுவானது தள்ளுபடி செய்து இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, பின்னர் இன்று 17.03.2026ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.03.17 17:13:07 +0530

முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி(FAC),
திருமங்கலம்.

**இணைப்பு**:-
**மனுதாரர்கள், எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்**:-

- இல்லை -

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.03.17 17:13:15 +0530

முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி(FAC),
திருமங்கலம்.

இடைநிலை மனு எண்.02/2023
அசல் வழக்கு எண்.271/2023
வரைவு/செவ்வை உத்தரவு
நாள் : 17.03.2026